இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 24.04.2025

# வாஜ்பாய் காலமும் - மோடி காலமும் 1

“பா.ஜ.க.வுடன் 2026 தேர்தலில் மட்டுமல்ல, 2031 சட்டமன்றத் தேர்தலிலும் கூட்டணி கிடையாது என்று சொல்லி வந்த நீங்கள், இப்போது உடனடியாக பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது ஏன்?” என்பது தான் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியைப் பார்த்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்வி ஆகும்.

“நீங்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கவில்லையா? அப்போது மட்டும் பா.ஜ.க. இவர்களுக்கு நல்ல கட்சியாகத் தெரிந்ததா? இப்போது எங்களை மட்டும் ஏன் பழி சொல்கிறீர்கள். நாங்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம்” என்று பொறுப்பற்ற வகையில் பதில் அளித்திருக்கிறார் பழனிசாமி.

**வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசின் தி.மு.க. அங்கம் வகித்த போதிலும், அக்கட்சியின் ஆட்சியையும் குறைந்த பட்ச செயல்திட்டத்துக்கு கட்டுப்பட வைத்து அதில் இருந்து மீற முடியாமல் கட்டுப்படுத்தியது தலைவர் கலைஞரின் ஆற்றலாகும். ‘கலைஞர் இருக்குமிடத்தில் மதச்சார்பு இருக்காது’ என்று முன்னாள் நிதி அமைச்சர் பெரியவர் சி.சுப்பிரமணியம் சொல்லும் அளவுக்கு பா.ஜ.க.வின் கடிவாளத்தை கலைஞர் கையில் வைத்திருந்தார் என்பது வரலாறு.**

**வாஜ்பாய் காலம் வேறு - மோடி காலம் வேறு என்பதை பழனிசாமி புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அன்றைய அரசியல் சூழலை முதலில் உணர வேண்டும்.**

1996 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மொத்தம் நான்கே நான்கு இடங்கள் தான் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வென்றது. 1991-96 அராஜக - ஊழலாட்சிக்கு தமிழ்நாட்டு மக்கள் மாபெரும் தண்டனையைத் தந்தார்கள். அவர் மீதும் அவரது அமைச்சரவையில் இடம் பெற்றவர்கள் மீதும் ஊழல் வழக்குகள் போடச் சொல்லி மக்கள் வலியுறுத்தினார்கள். தலைவர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு, இந்த வழக்குகளை விசாரிக்க மூன்று சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தது. இதில் இருந்து எப்படி தப்பிப்பது என்று நினைத்த ஜெயலலிதா, பா.ஜ.க.வின் தயவை நாடினார். அவரோடு கூட்டணி வைத்து தமிழ்நாட்டில் இரண்டு தொகுதிகளில் வெல்ல பா.ஜ.க.வும் திட்டமிட்டது. 1998 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உருவானது.

‘நிபந்தனை இல்லாமல் கூட்டணி சேர்ந்துள்ளேன்’ என்று ஜெயலலிதா சொன்னாலும், தேர்தல் முடிந்ததும் தனது வேலைகளைக் காட்டினார். தேர்தலில் வென்று ஆட்சி அமைக்கும் சூழல் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டது. உடனடியாக ஆதரவுக் கடிதம் தர மாட்டேன் என்றார். தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும், என் மீதான ஊழல் வழக்குகளை ரத்து செய்ய வேண்டும், சுப்பிரமணியம் சுவாமியை நிதி அமைச்சராக்க வேண்டும், வாழப்பாடி ராமமூர்த்திக்கு சட்டத்துறை அமைச்சர் பதவி தர வேண்டும் என்று ஜெயலலிதா கோரிக்கை வைத்தார். அதனை பா.ஜ.க. ஏற்கவில்லை.

இதனால் கோபமான ஜெயலலிதா, ஆட்சிக்கு ஆதரவு, அமைச்சரவையில் சேர மாட்டேன், பதவியேற்புக்கு போக மாட்டேன் என்றார். பின்னர் அமைச்சரவையில் சேர்ந்தார். பதவியேற்பிலும் கலந்து கொண்டார். தம்பிதுரை, சேடப்பட்டி முத்தையா, ஆர்.கே.குமார் ஆகியோர் அமைச்சர் ஆனார்கள். பதவியேற்புக்குச் சென்ற ஜெயலலிதா, ‘தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வலியுறுத்துவோம்’ என்று டெல்லியில் பேட்டி கொடுத்தார். அ.தி.மு.க. உறுப்பினர்களை வைத்து நாடாளுமன்றத்தில் இதைச் சொல்ல வைத்தார். “356 ஆவது சட்டப்பிரிவை பயன்படுத்தி எந்த மாநில அரசையும் கலைக்க மாட்டோம்” என்று பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அமைச்சர் சேடப்பட்டி முத்தையா, ஒரு வழக்கில் தொடர்புடையவராக இருந்ததால் அவர் பதவி விலகினார். ‘அமைச்சரவையில் இருக்கும் ஊழல் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும்’ என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார் ஜெயலலிதா. அவரை திருப்தி செய்ய பூட்டாசிங்கை நீக்கினார் பிரதமர். ஆனால் ராமகிருஷ்ண ஹெக்டேவை நீக்க மறுத்தார் பிரதமர். ‘தி.மு.க. ஆட்சியைக் கலைத்தால் பா.ஜ.க. ஆட்சிக்கு தரும் ஆதரவை நான் வாபஸ் பெறுவேன்’ என்று ஹெக்டே அறிவித்தது ஜெயலலிதாவை கோபப்படுத்தியது. ஹெக்டேவை நீக்கியே ஆக வேண்டும் என்றார் ஜெயலலிதா. அவரை சமாதானம் செய்ய டெல்லியில் இருந்து ஜஸ்வந்த்சிங் வந்தார்.

நிதித்துறை இணை அமைச்சராக இருந்த ஆர்.கே.குமார், ஜெயலலிதாவின் வருமானவரி வழக்குகள் அனைத்தையும் விசாரித்த அதிகாரிகள் அனைவரையும் ஒரே நாளில் இடமாற்றம் செய்தார். 89 துணை ஆணையர்கள், 108 உதவி ஆணையர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். சில நாட்களில் தான் சொன்னதை ஆர்.கே.குமார் செய்யவில்லை என்று அவரையே ராஜினாமா செய்யச் சொன்னார் ஜெயலலிதா.

**தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்லி நாடாளுமன்றத்தில் பிரச்சினை செய்து தினமும் வெளிநடப்பு செய்தது அ.தி.மு.க. “தி.மு.க.வுக்கும் பா.ஜ.க.வுக்கும் ரகசிய உறவு இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். தலைவர்களுடன் கலைஞர் தொடர்பு வைத்திருக்கிறார்” என்று பா.ஜ.க. கூட்டணி அரசில் இருந்து கொண்டே கொக்கரித்தார் ஜெயலலிதா.**

**இதற்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்த உள்துறை அமைச்சர் அத்வானி, “தி.மு.க. அரசைக் கலைக்க முடியாது” என்று அறிவித்தார். (21.6.1998) “தேசப்பாதுகாப்பில் அக்கறை இல்லாத ஒருவர் உள்துறை அமைச்சராக இருப்பதைப் பார்த்து வேதனைப்படுகிறேன்” என்றார் ஜெயலலிதா. தமிழ்நாட்டின் பல இடங்களில் பிரதமர் வாஜ்பாய் கொடும்பாவியை அ.தி.மு.க.வினர் கொளுத்தினார்கள்.**

இப்படி பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகிய இருவரது நிம்மதியையும் கெடுத்துக் கொண்டிருந்தார் ஜெயலலிதா.

- தொடரும்

## எத்தகைய கொடூர எண்ணம் கொண்ட அமைப்புகளாக இருந்தாலும்

# தீவிரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் !

### ஜம்மு - காஷ்மீர் சம்பவம் குறித்து சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டன உரை!

சென்னை, ஏப்.24-

**தமிழ்நாடு சட்டமன்றத்தில், ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தையும், உயிரிழுந்தோரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**



சட்டமன்றப் பேரவையில் நேற்று 23.4.2025, ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்து, மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பெஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது நேற்று நடத்தப்பட்டுள்ள மனிதாபிமானமற்ற, பயங்கரவாத தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தையும், அதில் உயிரிழந்த அனைவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் இப்பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜம்மு – காஷ்மீரில் நடத்தப்பட்ட தீவிரவாதிகளின் கொடூரச் செயல்!**

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பெஹல்காமில் உள்ள சுற்றுலா தலத்தில் நேற்றைய தினம் பயங்கரவாதிகள் மிகக் கொடூரமான ஒரு தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். இதில் இதுவரை 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்ட தகவல் நமக்கெல்லாம் கடும் அதிர்ச்சியையும் துயரத்தையும் அளித்துள்ளது.

காஷ்மீர் மாநிலத்தின் மிகப் பிரபலமான சுற்றுலாத் தலமான பெஹல்காமிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல; உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள்.

நேற்றையதினம் அங்கு பைசாரன் என்ற மலைப்பகுதியில் இருந்து திடீரென நுழைந்த தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது இரக்கமற்ற வகையில் கொடூரமான தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள்.

**பொதுமக்கள் மீது பயங்கரவாத தாக்குதல்!**

அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் இது போன்ற பயங்கரவாத தாக்குதல் கடுமையாக கண்டிக்கத்தக்கதாகும்.

சமீபத்திய ஆண்டுகளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் என்று அம்மாநில முதலமைச்சர் மாண்புமிகு உமர் அப்துல்லா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது. அங்கு எத்தகைய மோசமான, கொடூரமான, பயங்கரமான சூழல் நிலவுகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு ஆகும். பயங்கரவாத தீவிரவாத அமைப்புகள் எத்தகைய எண்ணம்கொண்டவையாகஇருந்தாலும்அவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

**டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் உதவி மையம் தொடங்க உத்தரவிட்டேன்!**

இந்தத் தாக்குதலில் இது வரை மொத்தம் 26 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலரும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற தகவல் எனக்குக் கிடைத்த வுடன் உடனடியாக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் சிறப்பு உதவி மையம் தொடங்குவதற்கு உத்தரவிட்டேன். இச்சம்பவம் குறித்து பொது மக்கள் தொடர்பு கொண்டு விவரங்கள் அறிய உதவி மையம் தொடங்கப்பட்டு, 011 24193300 (Landline), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையரை இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து செயல்பட உத்தரவிட்டேன்.

காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி, இச்சம்பவத்தில் பாதிக்கப் பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய உதவியைச் செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் பணியாற்றி வரும் கூடுதல் ஆட்சியரும் ஐ.ஏ.எஸ் அதிகாரியுமான அப்தாப் ரசூல் அவர்களை நேரடியாக ஜம்மு - காஷ்மீர் அனந்தநாக் மாவட்டம் பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளேன். இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுவதை உறுதி செய்து பத்திரமாக அழைத்து வர தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**மனிதாபிமானமற்ற தாக்குதல் தீவிரவாதத்தை தடுத்தாக வேண்டும்!**

காஷ்மீரில் நடந்துள்ள இந்தத் தாக்குதல் நம் அனைவரது மனசாட்சியையும் உலுக்குவதாக அமைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு குல்காமில் அமர்நாத் பயணம் சென்ற மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டார்கள். 2019 ஆம் ஆண்டு புல்வாமா தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எப். வீரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மனிதாபிமானமற்ற வகையில் அப்பாவி மக்களின் மீதான இது போன்ற தீவிரவாதத் தாக்குதலுக்கு இந்திய மண்ணில் குறிப்பாக, நமது இந்திய ஜனநாயகத்தில் அறவே இடமில்லை. இதனைக் கண்டிப்பதோடு நமது கடமை முடிந்துவிட வில்லை. இது போன்ற செயல்கள் நடப்பதை அறவே தடுத்தாக வேண்டும்.

> **“நமது நாட்டையே பெரும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கக் கூடிய இந்தக் கொடூரமான சம்பவத்திலே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திட ஒன்றிய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.”**

**சட்டப்பேரவையில் அஞ்சலி செலுத்துவோம்!**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக அனைவரும் எழுந்து இரண்டு நிமிட அமைதி அஞ்சலியைச் செலுத்த தங்களது மேலான அனுமதியைக் கோருகிறேன்.

**(மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.)**

**(பின்னர் அனைத்துக் கட்சியின் சார்பில் உறுப்பினர்கள் தங்களது ஆழ்ந்த இரங்கலையும், கண்டனங்களையும் தெரிவித்து உரையாற்றினர்.)**

**இறுதியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய உரை வருமாறு:**

பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீரில் நடைபெற்ற துயர சம்பவம் குறித்து இந்த அவையில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

**இதுபோன்ற கொடூரச் சம்பவம் நடைபெறாமல் ஒன்றிய அரசு தடுக்க வேண்டும்!**

நமது நாட்டையே பெரும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கக்கூடிய இந்தக் கொடூரமான சம்பவத்திலே பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு நமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திட ஒன்றிய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தகைய அனைத்து நடவடிக்கைகளை எடுக்கிற நேரத்தில் தமிழ்நாடும், தமிழ் மக்களும் என்றும் துணை நிற்பார்கள் என்று உறுதியை உங்கள் அனைவரின் சார்பிலும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

